www.tamilarangam.net



# கிளிநொச்சி மீட்பு!

பாவை சந்திரன்

## ஈழத் தமிழரின் போராட்ட வரலாறு




யாழ்ப்பாணத் தாக்குதலுக்குப் பதிலடியாக கொழும்பின் மையப் பகுதியில் அமைந்துள்ள சென்ட்ரல் வங்கியில், புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள் (31-1-1996). இந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர். 1400 பேருக்கு மேல் படுகாயமுற்றனர். அடுத்த தாக்குதலில் கொழும்பின் தெற்குப் பகுதியில் உள்ள 'தெகிவளை' என்ற இடத்தில் உள்ள ரயில் நிலையத்தில் வைக்கப்பட்ட குண்டின் மூலம் 70 பேர் உயிர்துறந்தனர் (24-7-1996). நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

இன்னொரு உச்சகட்டத் தாக்குதலாக முல்லைத்தீவு தாக்குதல் அமைந்தது. முல்லைத்தீவில் பத்தாயிரம் அடி நீளமும், ஐயாயிரம் அடி அகலமும் கொண்ட பகுதியை ஆக்கிரமித்து சிங்கள ராணுவ முகாம் இருந்தது. இந்த முகாமில் துருப்புகள் மட்டுமன்றி ஏராளமான ஆயுதங்களும், கனரக ஆயுதங்களும் குவித்துவைக்கப்பட்டிருந்தன.

எனவே, இந்த முகாமைத் தகர்ப்பதும், அதிலுள்ள ஆயுதங்கள் அனைத்தையும் சேதாரம் இல்லாமல் கைப்பற்றுவது என்பதும் பிரபாகரனின் திட்டமாக இருந்தது. கடலில் கடற்புலிகள் தாக்குவது என்றும், கரையில் போராளிகள் தாக்குவது என்றும் முடிவாயிற்று. 1996-ஆம் ஆண்டு ஜூலை 18-ஆம் நாள் அதிகாலை ஒரு மணியளவில் தாக்குதல் தொடங்கியது. விழித்தெழுந்த சிங்கள ராணுவத்தினர் எதிர்த்தாக்குதல் தொடுத்தும் பயனற்றுப் போனது. இறுதியில் முல்லைத்தீவு, ராணுவ முகாம் புலிகள் வசமாயிற்று.

முல்லைத்தீவைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியாக சிங்கள ராணுவம் அலம்பில் வழியாக, போர் நடந்த இடத்திற்கு அப்பாலுள்ள ஓர் இடத்தில் ஏராளமான துருப்புகளைக் கொண்டுவந்து இறக்கியது. இதனை யூகித்து உணர்ந்திருந்த புலிகள் அவர்களை வரும் வழியிலேயே மடக்கி அழித்தனர்.

ஆறு நாள்கள் நீடித்த 'திரிவிடபகர' என்னும் இந்த யுத்தத்தில், ஆயிரக்கணக்கான ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். கும்பல் கும்பலாக இறந்த சிங்கள வீரர்களின் உடல்களைப் பெற, சந்திரிகா அரசு மறுத்தது. இறந்துபோன வீரர்களின் உடல்களை ஏற்றுக்கொண்டால், அது தோல்வியை ஒப்புக்கொண்டதாக அமைந்துவிடும் என்று கருதிய ராணுவம், இறந்துபோன வீரர்கள், சிங்கள வீரர்களல்ல என்று அறிவித்தது.

உயிரற்ற 1200 உடல்களில் 55 உடல்களை மட்டும் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாகப் பெற்றுக் கொண்டது. எஞ்சியிருந்த உடல்களை செஞ்சிலுவைச் சங்கத்தினர் முன்னிலையில் புலிகளும், வன்னிப்பகுதி மக்களும் கும்பல் கும்பலாகத் தீயிட்டனர்.

இந்தத் தாக்குதலுக்குப் புலிகள் வைத்த பெயர் 'ஓயாத அலைகள்-1' என்பதாகும். இத் தாக்குதலில் இலகுரக ஆயுதங்கள் மட்டுமன்றி, கனரக ஆயுதங்களான போஃபர்ஸ் வகை பீரங்கிகள் இரண்டும் கைப்பற்றப்பட்டன. இது தவிர முகாம்களில் குவிக்கப்பட்டிருந்த கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்தியாவில் ஐக்கிய முன்னணி அரசில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த ஐ.கே.குஜ்ரால் அண்டை நாடுகளுடனான உறவு குறித்து ஐந்து அம்சக் கொள்கைகள் ஒன்றை அறிவித்தார். அவை: (1) அண்டை நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், மாலத்தீவு, நேபாளம் மற்றும் ஸ்ரீலங்கா ஆகியவற்றின் பிரச்னைகளில் எதிர்பார்ப்பு எதுவுமின்றி உதவுவது, (2) ஒரு நாட்டின் எல்லைகளுக்கும் இறையாண்மைக்கும் பங்கம் நேராமல்-மதித்து நடப்பது, (3) ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்னைகளில் இன்னொரு நாடு தலையிடாமல் இருப்பது, (4) அண்டை நாடுகளின் தேசப் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும்-ஒருமைப்பாட்டுக்கும் பங்கம் நேராமல் பார்த்துக்கொள்வது, (5) அண்டை நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் பிரச்னைகளை இருதரப்பினரும் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதாகும்.

இது நடைமுறை சாத்தியமா என்பது குறித்து அப்போது பலத்த விவாதங்கள் எழுந்தன. பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா எந்த முறையில் நடந்து கொள்ளும் என்ற கேள்விகளும் எழுந்தன. ஆனாலும், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் இந்தக் கொள்கை அறிவிப்பால் மகிழ்ந்த நாடுகளில் முக்கியமானது இலங்கை ஆகும். ஆமாம், இந்தக் கொள்கையில் இலங்கையின் இனப் பிரச்னையில் இந்தியத் தலையீடு இருக்காது என்று சந்திரிகா உறுதியாக நம்பினார். எனவே தன்போக்கில் அவர் செயல்பட ஆரம்பித்தார்.

சந்திரிகா அரசு முல்லைத்தீவை இழந்ததை மாபெரும் அவமானமாகக் கருதியது. இதற்குப் பதிலடி கொடுத்தே ஆகவேண்டும் என்றும் திட்டங்கள் தீட்டப்பட்டன. 'சத்ஜெய' என்ற பெயரில் சிங்கள ராணுவம் முப்படைகளும் இணைந்த தாக்குதல் ஒன்றை கிளிநொச்சி மீது தொடுத்தது. கிளிநொச்சியைக் கைப்பற்றிய ராணுவம் சுற்றியிருந்த இதர பகுதிகளையும் கைப்பற்றும் முயற்சியில் 30 ஆயிரம் வீரர்களுடன் களம் இறங்கி, 'ஜெயசிக்குறு' என்கிற பெயரில் 13-5-1997-இல் போரில் ஈடுபட்டது.

1998-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் தேதி, கண்டியில் உள்ள புத்தரின் பல் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் புகழ்பெற்ற புத்தக் கோவிலான 'தலதா மாளிகை' மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

கிளிநொச்சியை மீட்பதற்காக, பிரபாகரன் பிப்ரவரி 2-ஆம் தேதி போரைத் தொடங்கினர். உடனடி வெற்றி சாத்தியப்படவில்லை. எனவே, கைப்பற்றும் முயற்சிகள் தொடர்ந்தன. ஒவ்வொரு ஊராகக் கைப்பற்றிய புலிகள் திலீபனின் பதினோராம் ஆண்டு நினைவு நாளான செப்டம்பர் 26-ஆம் தேதி மிகப் பெரிய தாக்குதலைத் தொடுத்தனர்.

இந்தத் தாக்குதலில் ராணுவத் தரப்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் பலியானார்கள். இறுதியில் கிளிநொச்சி மீண்டும் புலிகள் வசமானது. இத் தாக்குதலுக்குப் புலிகள் 'ஓயாத அலைகள்-2' என்று பெயர் வைத்திருந்தனர்.

1998-இல் சந்திரிகா, விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் தடைவிதித்தார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விசாரணைகளுக்காக 5-5-1993-இல் பூந்தமல்லியில் அமைக்கப்பட்ட தனி நீதிமன்றம் 1997-இல் விசாரணையை முடித்தது. 1998-ஆம் ஆண்டு ஜனவரி 28-ஆம் தேதி, இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் நளினி-முருகன் தம்பதி உள்ளிட்ட 26 பேருக்குத் தூக்குத் தண்டனையும் அவர்கள் சாகும்வரை தூக்கில் தொங்கவிடப்படவேண்டும் என்றும் தனி நீதிமன்றத்தின் நீதிபதி வி.நவநீதம் தீர்ப்பளித்தார்.

குற்றவாளிகள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு (16-2-1998) செய்யப்பட்டதில், நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனை உறுதி செய்யப்பட்டது. (11-5-1999) ராபர்ட் ஜெயகுமார், ரவிச்சந்திரன் ஆகியோரின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக்கப்பட்டது. மீதமுள்ள 19 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

'ஓயாத அலைகள்-3' என்பது மாங்குளம் பகுதிகளை மீட்பது ஆகும். இந்தப் பகுதி யாழ்-கண்டி நெடுஞ்சாலையான 'ஏ-9'-க்கு கிழக்கே உள்ள ஒட்டுசுட்டான் பகுதியாகும். இந்தப் பகுதியை மீண்டும் கைப்பற்றும் வகையில் புலிகள் இருகட்டத் தாக்குதலை மேற்கொண்டனர். 1999-ஆம் ஆண்டு நவம்பர் 1, 5, மற்றும் 7-ஆம் தேதிகளில் நடைபெறற தாக்குதல்களில் ஒட்டுசுட்டான் பகுதியில் அடங்கிய நெடுங்கேணி, அம்பகாமம், கரிப்பட்டமுறிப்பு, மாங்குளம், கரையான்குளம், புளியங்குளம் ஊர்களையும் புலிகள் கைப்பற்றினர்.

இரண்டாம் கட்டமாக, மன்னார் பகுதியில், ராணுவம் கைப்பற்றியிருந்த பள்ளமடு, பெரியமடு, தட்சணா மருதமடு, மடுத்தேவாலயப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன.

சிங்கள ராணுவத்தின் தோல்விகளை வெளியிட பத்திரிகைகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. கடும் தணிக்கை விதிகளும் அமல்படுத்தப்பட்டன.

1999-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், சந்திரிகா மீது நடத்தப்பட்ட தாக்குதலில், அவர் கண்ணில் காயத்துடன் உயிர்தப்பினார். அதன்பிறகு நடைபெற்ற அதிபர் தேர்தலில் வென்று, மீண்டும் அதிபராகப் பொறுப்பேற்றார் (22-12-1999).

நாளை:
ஆனையிறவு புலிகள் வசம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்